ஆனால் தனியார் முன்வந்தால், இம்மாதிரியான மெரைன் பேஸ்டு மீன்கள் மட்டுமல்லாமல், 'மெரைன் பேஸ்டு' இன்டஸ்ட்ரிஸ்' தொடங்குவதற்கு அவர்கள் முன்வந்தால், மீன்வளத்துறையிலே, வல்லுநர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய அந்தக் கருத்தை, டெக்னாலஜி என்று சொல்லக்கூடிய தொழில் நுட்பம், தேவையான அளவிற்கு திட்ட அறிக்கை, புராஜக்ட் ரிப்போர்ட்ஸ்தயாரித்து, வேண்டிய உதவிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

குறுகிய கால வினா எண் 1

திருவெறும்பூர் அரசு கலைக்கல்லூரியை மகளிர் கல்லூரியாக மாற்றுதல்

**44707—* திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் அரசு கலைக்கல்லூரியை வரும் கல்வியாண்டு முதல் "மகளிர் கல்லூரி"-ஆக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனது நன்றியை அதற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவெறும்பூர் பகுதியில், 'பெல்', துப்பாக்கித் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகள் உள்ளன. அங்கு பணிபுரியும் 20 ஆயிரம் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் பயன்பெறக்கூடிய வகையில் திருச்சி மாவட்டத்தில் அரசினர் மகளிர் கல்லூரி இல்லை என்ற குறையைப் போக்கிட தமிழகத்தின் யுகப் பேரெளியான, இதய தெய்வம் டாகடர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்கால ஆட்சியில், வருகிற ஆண்டில் திருவெறும்பூர் கலைக் கல்லூரியை மகளிர் கல்லூரியாக மாற்றிட அரசு அனுமதி தருமா என அறிய விரும்புகிறேன்.

1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருவெறும்பூர் அரசு கலைக் கல்லூரியில் மாணவர்களும், மாணவிகளும் சேர்ந்து பயில்கின்றனர். திருச்சி மாவட்டத்திலே அரசு மகளிர் கல்லூரி எதுவும் இல்லை என்றும், தனியார் மகளிர் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான மாணவிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும், எனவே, திருவெறும்பூர் கலைக் கல்லூரியை மகளிர் கல்லூரியாக மாற்ற வேண்டும் என்றும் பொதுமக்கள் மற்றும் சேவை நிறுவனங்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார். எனவே இதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கருத்துக் கூறுமாறு அந்தக் கல்லூரி முதல்வர் மற்றும் திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது. அறிக்கை பெறப்பட்டவுடன்—தொட்டில் குழந்தை திட்டம் கொண்டு வந்து, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைத்து, பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியை அறவே ஒழித்து, பெண்கள் முன்னேற்றம், பெண்கள் கல்வி ஆகியவற்றில் இதுவரை வேறு எந்த முதலமைச்சரும் காட்டாத அக்கறையைக் காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) பெண்ணின் பெருமையை உலகிற்கு உணர்த்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு–உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் தொகுதியில் 5 கலைக் கல்லூரிகள் உள்ளன. அதில் இரண்டு, அரசினர் கலைக் கல்லூரிகளாகும். அதில் ஒரு கல்லூரியை மகளிர் கல்லூரியாக அறிவித்து, அதற்கு தமிழகத்தின் நந்தா மணிவிளக்கு, இதய தெய்வம் டாகடர் புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயர் சூட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூரிலே இருக்கின்ற கல்லூரியை மகளிர் கல்லூரியாக உயர்த்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை முன்பே தெரிவித்தேன். பெயர் வைப்பதைப் பற்றி அரசு பிறகு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் வைப்பதைப் பற்றி பிறகு பரிசீலிக்கப்படும் என்ற பதில் பொருத்தமானதாக இல்லை என்று நான் கருதுகிறேன். இனிமேல் அரசாங்கத்தைப் பொறுத்தவரை எதற்கும் என்னுடைய பெயரை வைக்க வேண்டாம் என்று நான் விரும்புகிறேன்.

83—

நன்னிலம் அரசு மருத்துவமனையை மேம்படுத்துதல்.

***21838–டாக்டர் க. கோபால்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் பொது மருத்துவமனையில் தேவையான அடிப்படை வசதிகள், அவசர ஊர்தி (Ambulance) இல்லாதது குறித்து அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 40 படுக்கைகள் வசதி கொண்ட நன்னிலம் அரசு மருத்துவமனையில் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளன. அங்கு அவசர நோயாளி ஊர்தி வசதி செய்து தரப்படவில்லை.

(ஆ) 50 படுக்கைகள் வசதி கொண்ட அரசு மருத்துவமனைகளுக்கு மட்டுமே நோயாளி ஊர்தி வழங்கப்பட்டு வருகிறது. எனவே இவ்வினாவிற்கு இடமில்லை.

97—

ஜல்லி உடைக்கும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச தினக்கூலி நிர்ணயம் செய்தல்.

***25754–டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஜல்லி உடைக்கும் சங்க தொழிலாளர்களுக்கும் ஒரே சீரான குறைந்த பட்ச தினக்கூலி நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS